ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

**வெளியிடுபவர்** பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்

**திகதி** 2018.08.03

## நாணயக் கொள்கை மீளாய்வு: இல.5 - 2018

### இலங்கை மத்திய வங்கி கொள்கை வட்டி வீதங்களைத் தற்போதைய மட்டங்களிலேயே பேணுகின்றது

**இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை 2018 ஓகத்து 02ஆம் நாள் நடைபெற்ற அதன் கூட்டத்தில் கொள்கை வட்டி வீதங்களை அவற்றின் தற்போதைய மட்டங்களில் பேணுவதற்குத் தீர்மானித்தது. இதற்கமைய இலங்கை மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் முறையே 7.25 சதவீதமாகவும் 8.50 சதவீதமாகவும் தொடர்ந்தும் காணப்படும். நடுத்தர காலத்தில் பணவீக்கத்தை நடு ஒற்றை இலக்க மட்டத்தில் உறுதிப்படுத்துவதனையும் அதன் மூலம் இலங்கைப் பொருளாதாரத்தின் அதிகரித்த மற்றும் நீடித்த வளர்ச்சி உத்வேகத்திற்கு பங்களிப்பு செய்வதற்குமான நோக்குடன் இசைந்து செல்லும் வகையில் சபையின் தீர்மானம் அமைந்துள்ளது. சபையானது அதன் தீர்மானத்தினை மேற்கொள்வதற்கு தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பொருளாதார அபிவிருத்திகளை கரிசனையுடன் கண்காணித்துள்ளது.**

### அதிகரித்த நிச்சயமற்ற நிலைமைகளுக்கு மத்தியிலும் உலகளாவிய வளர்ச்சி பலமடைந்து வருகின்றமை

நாடுகளுக்கிடையே நிலவிய சமச்சீரற்ற விரிவாக்கத்திற்கு மத்தியிலும் 2018 மற்றும் 2019இல் உலகப் பொருளாதாரங்கள் பலமடையும் என்பதைப் பன்னாட்டு நாணய நிதியத்தின் உலகப் பொருளாதாரத் தோற்றப்பாட்டின் (யூலை 2018) தற்போதைய இற்றைப்படுத்தல் உறுதிப்படுத்தியுள்ளது. ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஏனைய முக்கிய பொருளாதாரங்களின் நாணயக் கொள்கை இறுக்கமாக்கல், ஐ.அ.டொலர் வலுவடைந்து வருகின்றமை, எழுச்சி பெற்றுவரும் பல சந்தைப் பொருளாதாரங்களின் நாணயங்கள் மீதான அழுத்தங்கள் மற்றும் அதிகரித்து வரும் வர்த்தக அழுத்தங்கள் என்பவற்றுக்கு மத்தியிலும் இடர்நேர்வுகளின் சமனிலையானது கீழ்நோக்கிச் சார்ந்துள்ளது. இத்தகைய இடர்நேர்வுகளுக்குப் பதிலிறுத்தும் வகையில் சில எழுச்சி பெற்றுவரும் பொருளாதாரங்கள் அவற்றின் நாணயக் கொள்கையை இறுக்கமாக்கியுள்ளதுடன் அவற்றின் செலாவணி வீதங்கள் பொருத்தமான வகையில் சீராக்கப்படுவதற்கும் அனுமதித்துள்ளன.

**2018இன் இரண்டாம் காலாண்டிலிருந்து உள்நாட்டுப் பொருளாதார வளர்ச்சியில் படிப்படியான மேம்பாடு எதிர்பார்க்கப்படுகின்றது**

முதன்மைக் குறிகாட்டிகளில் அவதானிக்கப்பட்ட அபிவிருத்திகள், மற்றும் தற்போதைய எறிவுகூறல்களிற்கிணங்க இலங்கையின் உண்மைப் பொருளாதார வளர்ச்சியானது ஆண்டின் இரண்டாம் காலாண்டிலிருந்து படிப்படியான அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேம்பட்ட வானிலை நிலைமைகள் 2018இன் பின்னரைப் பகுதிக்கான வேளாண்மை நடவடிக்கைகள் மற்றும் தொடர்பான கைத்தொழில்களில் சாதகமான விளைவினை ஏற்படுத்துவதுடன் ஒட்டுமொத்த வளர்ச்சி உத்வேகத்திற்கும் ஆதரவளிக்குமெனவும் எதிர்பார்க்கப்படுவதுடன் இது பணிகள் மற்றும் கைத்தொழில் சார்ந்த நடவடிக்கைகளின் விரிவாக்கத்தினாலும் வழிநடாத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. தொடர்ச்சியான இறைத்திரட்சிகளுக்கு மத்தியிலும் போட்டிமிக்க நெகிழ்ச்சி வாய்ந்த செலாவணி வீதம், தாழ்ந்த பணவீக்கச் சூழல் ஏற்றுமதி மற்றும் முதலீடுகளுக்கு ஆதரவளிக்கும் வகையிலான வலுவான கொள்கை கட்டமைப்பு என்பவற்றிலிருந்து நன்மை பெறும் வகையில் நடுத்தர காலத்தில் பொருளாதாரமானது உள்ளார்ந்த மட்டத்தையடையுமென எறிவு செய்யப்பட்டுள்ளது.

**அண்மைக்கால அதிகரிப்புக்கு மத்தியிலும் பணவீக்கம் நடு ஒற்றை இலக்கத்தில் தொடர்ந்துமிருத்தல்**

2018இன் பெப்புருவரி - யூன் காலப்பகுதியில் குறைந்த ஒற்றை இலக்கங்களில் தொடர்ந்தும் காணப்பட்ட ஆண்டுக்காண்டு முதன்மைப் பணவீக்கமானது எதிர்பார்க்கப்பட்டவாறு 2018 யூலையில் அதிகரித்துள்ளது. உள்நாட்டுப் பெற்றோலிய விலைகளின் மேல்நோக்கிய திருத்தங்கள், தளம்பலடையும் உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரித்தமை அதேபோன்று தளத்தாக்கம் என்பவற்றிலிருந்து அண்மைக்காலத்தில் தோன்றிய தற்காலிக விலை அழுத்தங்களே இதன் முக்கிய காரணங்களாகும். பணவீக்கமானது ஓகத்தில் சார்பளவில் உயர்வடையுமென எறிவு செய்யப்பட்டுள்ளதெனினும் 2018இன் மூன்றாம் காலாண்டு இறுதியளவில் அறுவடையின் தாக்கத்தினால் அதனைத் தொடர்ந்து குறைவடையும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. நிலையான உள்ளார்ந்த பணவீக்கமானது உறுதியான பணவீக்க எதிர்பார்ப்புகளுடன் இணைந்து மட்டுப்படுத்தப்பட்டுள்ள கூட்டுக்கேள்வி அழுத்தங்களை குறித்துக் காட்டுவதுடன் நடுத்தரகாலத்தில் நடு ஒற்றை இலக்கப் பணவீக்கத்தின் எறிவிற்கும் ஆதரவளிக்கின்றது.

**மிகையான ரூபாத் திரவத்தன்மைக்குப் பதிலிறுத்தும் வகையில் குறுங்கால சந்தை வட்டி வீதங்கள் காணப்படுகின்ற அதேவேளை நாணய விரிவாக்கம் தொடர்ந்தும் படிப்படியாகக் குறைவடைகின்றது**

உள்நாட்டு பணச் சந்தையில் நிலவுகின்ற மிகையான திரவத்தன்மை நிலைமைகளுக்குப் பதிலிறுத்தும் வகையில் குறுங்கால வட்டி வீதங்கள் கீழ்நோக்கி சீராக்கமடையத் தொடங்கியுள்ளன. முதலாந்தர மற்றும் இரண்டாந்தர சந்தைகள் இரண்டிலும் அரச பிணையங்கள் மீதான விளைவுகள் அண்மைக் காலங்களில் வீழ்ச்சியடைந்துள்ளன. இத்தகைய அபிவிருத்திகளுடன் இசைந்துசெல்லும் விதத்தில், ஏனைய சந்தை வட்டி வீதங்களும் குறிப்பாக கடன் வழங்கல் மீதான வட்டி வீதங்கள், இனிவரும் அண்மிய காலங்களில் கீழ்நோக்கி சீராகும் என்பதுடன் கடன்படுநர்களால் தற்போது எதிர்நோக்கப்படுகின்ற அதிகரித்த உண்மை வட்டி வீதங்கள் குறைவடையுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

வர்த்தக வங்கிகளால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடனின் வளர்ச்சியானது அதன் விரும்பத்தக்க மட்டங்களை நோக்கித் தொடர்ந்தும் படிப்படியாக குறைவடைந்துள்ளது. தனியார் துறைக்கான கொடுகடன் வளர்ச்சியின் வீழ்ச்சி அதேபோன்று வங்கித்தொழில் துறையினால் தேறிய அடிப்படையில் அரசுக்கு வழங்கப்பட்ட கொடுகடனின் குறைவு என்பவற்றுடன் இணைந்து 2018 யூனில் திரண்ட நாணய விரிவாக்கமும் வீழ்ச்சியடைந்துள்ளது. நாணயம் மற்றும் கொடுகடனின் விரிவாக்கத்தின் இத்தகைய போக்குகள் நாணய

உறுதிப்பாட்டினை மேலும் மேம்படுவதனைக் குறித்துக் காட்டுவதுடன் பொருளாதாரத்தின் எதிர்பார்க்கப்பட்ட நடுத்தர கால வளர்ச்சிப் பாதையுடன் இசைந்து செல்வதாகவும் காணப்படுகின்றது.

**வெளிநாட்டுத் துறை கலப்பான செயலாற்றம் ஒன்றினைப் பதிவு செய்துள்ளது**

ஏற்றுமதி வருவாய்களின் வளர்ச்சியானது 2018 மேயில் இறக்குமதிச் செலவினங்களின் வளர்ச்சி வேகத்தை விஞ்சியமையைத் தொடர்ந்து குறிப்பிட்டளவிலேனும் வர்த்தக இடைவெளியில் குறைவினை ஏற்படுத்தியுள்ளது. ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் சுற்றுலாத் துறையிலிருந்தான வருவாய்கள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள் என்பன தொடர்ந்தும் அதிகரித்து நடைமுறைக் கணக்கிற்கு ஆதரவளித்துள்ளன. தங்கம் மற்றும் மோட்டார் வாகன இறக்குமதிகளின் மிகையான வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்காக அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட வழிமுறைகள் வர்த்தக் கணக்குகள் இயக்கவாற்றலிருந்து தோன்றுகின்ற சென்மதி நிலுவை மீதான அழுத்தங்களைக் குறைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, ஏனைய எழுச்சிபெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்களில் அவதானிக்கப்பட்டவாறு ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட அரச பிணையங்கள் சந்தையின் வெளிநாட்டு முதலீடுகள் அண்மைக்காலமாக சில வெளிப்பாய்ச்சல்களைத் தோற்றுவித்திருந்தன. இரண்டாந்தரச் சந்தையிலிருந்தான வெளிப்பாய்ச்சல்களுக்கு மத்தியிலும், முதலாந்தரச் சந்தை நடவடிக்கைகளின் விளைவால், கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை தேறிய உட்பாய்ச்சல்களை ஈர்த்துள்ளது. எனினும் முக்கியமாக உலகளாவிய சந்தைகளில் ஐ.அ.டொலர்களைப் பரந்த அடிப்படையில் பலப்படுத்தப்பட்டதன் விளைவுகளைப் பிரதிபலிக்கும் வகையில் 2018 ஏப்பிறலின் பிற்பகுதியிலிருந்து அவதானிக்கப்பட்ட செலாவணி வீதத்தின் மீதான சில அழுத்தங்கள் 2018 யூலை பிற்பகுதியிலிருந்து குறிப்பிட்டளவில் குறைவடைந்துள்ளது. இவ்வபிவிருத்திகளை பிரதிபலிக்கும் வகையில், ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில், ஐக்கிய அமெரிக்கடொலருக்கெதிரான செலாவணி வீதம் 4.2 சதவீதத்தால் தேய்வடைந்துள்ளது. மத்திய வங்கியானது, 2018 யூலை இறுதியளவில் தேறிய அடிப்படையில் உள்நாட்டு சந்தைகளிலிருந்து ஐ.அ.டொலர் 133.9 மில்லியனை உள்ளீர்த்துக் கொண்டது. மொத்த அலுவல்சார் ஒதுக்கு நிலைமைகள் 2017இன் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 8.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018 யூலை 30இல் ஐ.அ.டொலர் 8.4 பில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது.

**கொள்கை வட்டி வீதங்கள் தற்போதைய மட்டங்களிலேயே பேணப்பட்டது.**

தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்பட்ட பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகளின் அடிப்படையில் மத்திய வங்கியின் நாணயச் சபையானது தற்போதைய நாணயக் கொள்கை நிலையைத் தொடர்ந்தும் பேணுவது பொருத்தமானது என்ற தீர்மானத்தினைக் கொண்டுள்ளது. அதற்கிணங்க நாணயச் சபையானது மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தையும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதத்தையும் அதன் தற்போதைய மட்டங்களிலேயே பேணுவதற்குத் தீர்மானித்துள்ளது.

| **நாணயக் கொள்கைத் தீர்மானம்:** | **கொள்கை வீதங்கள் மாற்றமடையவில்லை** |
|---|---|
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 7.25% |
| துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் | 8.50% |
| நியதி ஒதுக்கு விகிதம் | 7.50% |

**தகவல் குறிப்பு:**

ஆளுநர் முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி அவர்களுடனான பத்திரிகை மாநாடு இன்று (2018 ஓகத்து 03) முற்பகல் 11.30 மணிக்கு இலங்கை மத்திய வங்கியின் ஜோன் எக்ஸ்ரர் பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

நாணயக் கொள்கை மீதான அடுத்த கிரமமான அறிக்கை 2018 செத்தெம்பர் 28 நாள் வெளியிடப்படும்.

**தரவு இணைப்புக்கள்:**

## அட்டவணை 01: பணவீக்கம்

| மாதம் | | மாச் 18 | ஏப் 18 | மே 18 | யூன் 18 | யூலை 18 |
|---|---|---|---|---|---|---|
| முதன்மைப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு % மாற்றம்) | கொநுவிசு(2013=100) | 4.2 | 3.8 | 4.0 | 4.4 | 5.4 |
| | தேநுவிசு(2013=100) | 2.8 | 1.6 | 2.1 | 2.5 | - |
| மையப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு % மாற்றம்) | கொநுவிசு(2013=100) | 3.4 | 3.5 | 3.2 | 3.4 | 3.9 |
| | தேநுவிசு(2013=100) | 1.9 | 1.9 | 1.7 | 1.8 | - |

*மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்*

## அட்டவணை 02: நாணயத் துறை அபிவிருத்திகள் (தற்காலிகமானவை)

| குறிகாட்டி | வெளிநின்ற தொகை (ரூ.பில்லியன்) | | | | ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மாச் 18 | ஏப் 18 | மே 18 | யூன் 18 | மாச் 18 | ஏப் 18 | மே 18 | யூன் 18 |
| ஒதுக்குப் பணம் | 997 | 1,000 | 973 | 999 | 11.8 | 12.9 | 13.2 | 12.0 |
| விரிந்த பணம் ($M_{2b}$) | 6,607 | 6,692 | 6,671 | 6,748 | 16.4 | 16.8 | 15.0 | 14.9 |
| தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் | 106 | 119 | 74 | 101 | 128.6 | 135.0 | 123.4 | 141.1 |
| தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் | 6,500 | 6,572 | 6,597 | 6,646 | 7.5 | 8.2 | 7.8 | 8.6 |
| அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடன் | 2,278 | 2,322 | 2,324 | 2,273 | 2.9 | 5.3 | 3.8 | 1.7 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடன் | 557 | 581 | 608 | 619 | -2.6 | 0.8 | 4.8 | 8.5 |
| தனியார் துறைக்கான கொடுகடன் | 5,022 | 5,044 | 5,073 | 5,156 | 15.3 | 15.3 | 15.1 | 14.9 |
| விரிந்த பணம் ($M_4$) | 8,112 | 8,218 | 8,207 | 8,244 | 16.7 | 16.8 | 15.1 | 14.2 |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

## அட்டவணை 03: வட்டி வீதங்கள்

| வட்டி வீதம் (%) | மாச்சு 18 முடிவில் | ஏப் 18 முடிவில் | மே 18 முடிவில் | யூன் 18 முடிவில் | யூலை 18 முடிவில் | 02 ஓகத் 18 இல் உள்ளவாறு |
|---|---|---|---|---|---|---|
| **மத்திய வங்கியின் கொள்கை வீதங்கள்** | | | | | | |
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 7.25 | 7.25 | 7.25 | 7.25 | 7.25 | 7.25 |
| துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 8.75 | 8.50 | 8.50 | 8.50 | 8.50 | 8.50 |
| **நிறையேற்றப்பட்ட சராசரி அழைப்புப் பணவீதம்** | 8.41 | 7.86 | 7.93 | 8.50 | 8.46 | 8.34 |
| **திறைசேரி உண்டியல் விளைவுகள் (முதலாந்தரச் சந்தை)** | | | | | | |
| 91-நாள் | 8.17 | 8.10 | 8.34 | 8.32 | 8.24 | 8.17 |
| 182-நாள் | - | - | 8.93 | 8.85 | 8.74 | - |
| 364-நாள் | 9.69 | 9.59 | 9.62 | 9.39 | 9.27 | 9.23 |
| **கடன்வழங்கல் வீதங்கள்** | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதம் (வாராந்தம்) | 11.55 | 11.21 | 11.42 | 11.33 | 11.44 (அ) | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட கடன்வழங்கல் வீதம் | 14.04 | 14.13 | 14.06 | 14.05 | - | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன்வழங்கல் வீதம் | 14.25 | 14.29 | 14.15 | 13.94 | - | - |
| **வைப்பு வீதங்கள்** | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் | 9.00 | 8.98 | 8.91 | 8.92 | 8.64 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதம் | 11.41 | 11.38 | 11.23 | 11.26 | 10.82 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதம் | 10.33 | 10.75 | 10.67 | 10.57 | - | - |

(அ) வாராந்த சாராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன் வழங்கல் வீதமானது 2018 யூலை 26இல் முடிவடையும் வாரத்திற்கானது

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*